(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்குமுறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின் கீழ், பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு 16 உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரி டமிருந்து பெற்றுகொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 1! மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974, செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 182-எ விதியின் கீழ், 1974-75-ம் ஆண்டிற்கான, பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர் களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.